

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2024) முகாம் அலுவலகத்தில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த “கலைஞர் 100 கவிதைகள் 100” நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் முதல் நூலினைப் பெற்றுக் கொண்டார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நூல் ஆசிரியர் கவிப்பேரரசு வைரமுத்து, திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் உள்ளனர்.



கலைஞர் அவர்களின் உயிரோடும், உணர்வோடும் கலந்த நம் அண்ணா அறிவாலயத்தில், அண்ணா கலைஞர் திருவுருவச்சிலைகளுக்கு அருகே வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்துக்கு கழக நிர்வாகிகளுடன் இணைந்து கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

# ரூ 10.27 கோடியில் உயர்தர புற்றுநோய் சிகிச்சைக் கட்டிடம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஆக.9-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்2023 பதிவுத்தொகை மற்றும் அரசு நிதி பங்களிப்பு சேர்த்து ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் உயர்தர புற்றுநோய் சிகிச்சை கட்டடம் அடிக்கல் நாட்டுதல் ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனையில் புதிய கட்டிடம் திறந்து வைத்தல் ரூ.30 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தல் உள்ளிட்டவைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மருத்துவக்கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை, அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனை மற்றும் இராயப்பேட்டை அரசு பொதுமருத்துவமனையில் நேற்று முன்தினம் (07.08.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மருத்துவக் கட்டிடம் திறந்து வைத்து, மருத்துவ உபகரணங்களை வழங்கி, புதிய மருத்துவக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

**அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனை**

202021 நிதிநிலை அறிக்கையில் அறிவித்த அறிவிப்பின்படி, ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் 4ஆம் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அறுவை சிகிச்சை அரங்கம், அறுவை சிகிச்சைக்குப்பின் கண்காணிப்பு அறை, அதிதீவிர சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவை 25,000 சதுர அடியில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிகழ்வில் இன்போசிஸ் நிறுவனம் CSR நிதியின் கீழ் ரூ.30 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கியுள்ளது. அதில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகணரங்கள் அரசு கஸ்தூரி பாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனைக்கும், ரூ.10 கோடிமதிப்பீட்டிலான மருத்துவ உபகரணங்கள் சென்னை, இராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் – 2023**

இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் ரூ.40.05 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய புதிய 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் தரைதளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்டவை 62,700 சதுர அடி பரப்பில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்-2023 மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்களின் சீரிய முயற்சியின் காரணமாக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ந் தேதி நடைபெற்று 73,000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கின்னஸ் சாதனையாக உருபெற்றது. இந்நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த பதிவுத் தொகை ரூ.3,42,50,000 மற்றும் அரசு பங்களிப்பு நிதியாக நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.6,85,00,000 மொத்தம் ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் தரைத்தளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்டு 62,700 சதுர அடி பரப்பளவில் தரைத் தளத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, முதல் தளத்தில் உள்நோயாளிகள் பிரிவு, இரண்டாம் தளத்தில் நவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கங்கள், அறுவை சிகிச்சைக்கு முந்தைய அறை, மீட்பு அறை, தீவிர சிகிச்சை பிரிவு போன்ற வசதிகளுடன் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். ப்ரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவமனைக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் (பொ) மரு.சுமதி, இன்போசிஸ் நிர்வாகிகள் திருமதி.உமாதேவி, சூர்யா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பல்வேறு காலகட்டங்களில் இந்திய ஒன்றியத்தின் அரசியல் போக்கை தீர்மானித்த கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்தில், கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவருடைய திருவுருவப்படத்திற்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை! திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில்

# ரூ.3.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வணிக வளாகங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.9-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (07.08. 2024) சென்னை, திருவல்லிக்கேணியில், பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.3.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு புதிய வணிக வளாகங்களை திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்குகள் நடத்துதல், திருக்குளங்களை சீரமைத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருவதோடு, திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டும் வகையில் அவற்றிற்கு சொந்தமான இடங்களில் வணிக வளாகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், பக்தர்கள் தங்கும் விடுதிகள் போன்றவை கட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 2021 2022ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பில், “சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 18 இடங்களில் உள்ள சிதிலமடைந்த வாடகைக் குடியிருப்புகளை அகற்றி விட்டு புதிய வணிக வளாகம், குடியிருப்புகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்” என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் ரூ. 3.22 கோடி மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் மற்றும் பொன்னப்பன் சந்தில் ரூ.19.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் என மொத்தம் ரூ.3.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு வணிக வளாகங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்து, குத்து விளக்கு ஏற்றினார். இவ்விழாவிற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஶ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ஏஆர்பி.எம்.காமராஜ், திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி சி.நித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ 5.70கோடி மதிப்பீட்டில் - 161 பயனாளிகளுக்கு

# செஞ்சியில் ‘ கலைஞர் கனவு இல்லம்’ திட்ட ஆணைகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

*செஞ்சி ஆக. 9-*

*விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செஞ்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.*

*விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார்.*

*செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் ,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் சீத்தாலட்சுமி அனைவரும் வரவேற்றார்*

*ிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு5 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 161 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான உத்தரவு ஆணைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார். அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 6 ஆம்ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 161 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பணி ஆணை வழங்குவதற்கு உத்தரவிட்ட தமிழ்நாடு அமைச்சருக்கு முதலில் நன்றி தெரிவிக் கொண்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான்*

*கூரை வீடுகள் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் விருப்பம் என தெரிவித்தார்.*

*சாலை ஓரத்தில் வாழ்ந்த மக்களுக்கு முதன் முதலில் அடுக்குமாடி கட்டிடம் கட்டி வீடுகள் வழங்கியவர் கலைஞர் அவரது ஆட்சியில் தீப்பிடிக்காத வகையில் வீடுகளையும் தொகுப்பு வீடுகளையும் கட்டிக் கொடுத்தவர்கலைஞர்.*

*அவர் வழியில் இன்று திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு ஒன்றிய அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கும் நிதியை காட்டிலும் 2 மடங்கு கூடுதலாக தொகை கொடுத்து கிராமத்தில் தொகுப்பு வீடுகளை கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.*

*மேலும் கிராமத்தில் வயல்வெளிகளில் வனத்துறை பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களை கண்டெடுத்து அவர்களுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி அவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டுமணி நடைபெற்று வருவதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் செஞ்சி ,வல்லம், மேல்மலையனூர் ஒன்றியங்களில் 7500நபர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.*

*நிகழ்ச்சியில்செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை, செஞ்சி துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய பொறியாளர்கள்அருண் பிரசாத், சுப்பிரமணி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பழனி, காஞ்சனா, சசிகலா,ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர் முல்லை நன்றி கூறினார்.*



தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து,நகரின் முக்கிய வீதிகளில் மௌன ஊர்வலம் சென்று,500 க்கும் மேற்பட்ட ஏழை எளியோர்க்கு உணவு வழங்கப்பட்டது.நிகழ்வில் அவைத்தலைவர் கே.மனோகரன்,மாநில நிர்வாகிகள் சூடப்பட்டி சுப்ரமணி,சத்தியமூர்த்தி,ராஜேந்திரன்,காரிமங்கலம் ஒன்றிய கழக செயலாளர்கள் இல.கிருஷ்ணன், எம்வீடி.கோபால், அன்பழகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை மாவட்ட ‘முரசொலி’ செய்தியாளர் வீ.சரவணன் தந்தையார்

# ச.வீரமணி படத்திறப்பு நிகழ்ச்சி!

## சு.கல்யாண சுந்தரம் எம்.பி.திறந்துவைக்கிறார்!

*தஞ்சாவூர்,ஆக. 9-*

*தஞ்சாவூர் மாவட்ட முரசொலி நிருபர் வீ.சரவணன் அவர்களின் தந்தையார் மறைந்த ச.வீரமணி அவர்களின் படத்திறப்பு விழா 11.08.2024 ஞாயிறு அன்று காலை கும்பகோணம் அசூர் பைபாசில் உள்ள மீரா கார்டன் ராஜ் அப்பார்ட்மெண்டில் நடைபெறுகிறது.*

*மறைந்த ச.வீரமணி அவர்களின் திருஉருவப் படத்தை மாவட்டக்கழக செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார். மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏ,தலைமை செயற்குழு உறுப்பினர் செ.ராமலிங்கம், தமிழ்நாடு அரசின் தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், மாநகர செயலாளர் துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் எஸ். கே.முத்துசெல்வம், தெற்கு மாவட்ட செயலாளர் கா.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அசோக்குமார், மாநகர மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்கின்றனர்.*



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி சேலம் கிழக்கு மாவட்டம் சார்பில் வாழப்பாடி பேருந்து நிலையத்தில் இருந்து கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் அமைதி பேரணியாக சென்று மாவட்ட அலுவலகத்தில் உள்ள கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, மூர்த்தி, சிவராமன், தங்க மருதர்முத்து, டாக்டர் செழியன், மணி, அழகுவேல், பாலமுருகன், சித்தார்த்தன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், சார்பு அணி நிர்வாகிகள் முனைவர் சீனிவாசன் அப்பாதுரை, ப்ரண்ஸ் ரமேஷ், முனைவர் வரத.ராஜசேகர், தனசேகரன், மலர்விழி ராஜா, தமிழ்ச்செல்வன், கோகுல், செல்வமணி, முத்துலிங்கம், சந்திரமோகன், சிவராமன், சங்கர், கோபால், மற்றும் மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.